சாட்சிய வாக்குமூலம்

(கு.வி.மு.ச.அத்தியாயம் 23)

முதல் கூடுதல் உதவி அமர்வு நீதிமன்றம், ஈரோடு மாவட்டம்

அமர்வு வழக்கு எண்.102/2017

2026ம் ஆண்டு ஜனவரி மாதம் 30–ம் தேதி நாள் அரசு தரப்பு சாட்சியாக அ.த.சா.–2வது சாட்சியாக விசாரிக்கப்படுபவர் 1968ம் ஆண்டு 54 வது சட்டத்தில் உள்ள 5(2) பிரிவின்படி ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது. 1,2 எதிரிகள் ஆஜர்.3ம் எதிரி இன்று நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை அவர் கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். அந்த மனு அனுமதிக்கப்பட்டது.அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மல்லிகா | மாவட்டம் | : | |
| க/பெ.பெயர் | : | வாசுதேவன் | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| வட்டம் | : | | | | |

**<u>மனுவின் பெயரில் அழைக்கப்பட்டு எதிரிகள்தரப்பில்குறுக்குவிசாரணை</u>**

1. 28.06.2014 அன்று நானும், என் கணவரும் என் மகனின் அறைக்கு சென்று சுத்தம் செய்வதற்காக சென்ற போது அங்கே என் மகன் வைத்திருத்த புத்தகத்தில் எழுதிவைத்திருந்த கடிதத்தை படிக்கும்போதுதான் என் மகன் 3ம் எதிரியை காதலித்து என் மகனை ஏமாற்றி காதல் தோல்வியால் தற்கொலை செய்து கொண்டார் என்பதை தெரிந்துகொண்டேன் என்று என் முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 28.06.2014 அன்று என்னுடைய மகனின் அறையிலிருந்து எந்தவிதமான புத்தகங்களிலிருந்தும் எந்தவிதமான கடிதத்தையும் நானும், என் கணவரும் கைப்பற்றவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2. 18.06.2014 என்னுடைய போலீசார் விசாரணையில் ஒரு பெண்ணை திருமணம்செய்துகொள்வதாகவும் அந்த பெண்ணை திருமணம் செய்துகொள்வதாக என் மகன் என்னிடம் சொன்னார் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். 3வது எதிரி என்னுடைய மகனை எப்போதும் காதலிக்கவில்லை என்பதால்தான் 18.06.2014 போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னல் சரியல்ல. 30.06.2014 அன்று போலீசார் விசாரித்தபோது தான் கேரளாவை சேர்ந்த சிவராமகிருஷ்ணனின் மகள் மஞ்சுவை எனது மகன் காதலித்து வந்ததை

பற்றி எனது மகனை காதலித்ததாக சொல்லி ஏமாற்றிய மஞ்சு பற்றியும் மஞ்சுவின் பொற்றோர்கள் பிறரிடம் என் மகனை பற்றி கேவலமாக பேசியதை பற்றி தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான்.

3. 3வது எதிரி எப்போதும் என் மகனை காதலிக்கவில்லை என்பதால்தான் மேற்படி விசயம் எனக்கு தெரியவில்லை என்றாலும் கடிதம் கிடைத்ததாக சொல்லப்படும் தேதிவரை எனக்கு தெரியவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1,2 எதிரிகள் மருத்துவர் சதாவித்திடம் அருண்ராமை பற்றி இழிவாகவும், கேவலமாகவும் பேசி மன உழைச்சல் ஏற்படுத்தி என் மகன் தன்னுடைய கடிதத்தில் எதிரிகள் மூவரும் தான் தற்கொலைக்கு தூண்டி விட்டார்கள் என்றும் 2ம் எதிரியான பானுமதி சதாசிவத்திடம் 3ம் எதிரிக்கு திருமணம் நடக்க இருப்பதால் அருண்ராமை அழைபேசியில் 3ம் எதிரியிடம் பேச வேண்டாம் என்று கூறினார் என்றும் 1ம் எதிரி சதாசிவத்திடம் அருண்ராமை ஒழுங்காக இருக்க சொல்லி அறிவுறுத்தினார் என்றும் இல்லை என்றால் 1ம் எதிரி தனக்கும் ஈரோட்டில் ஆட்கள் இருப்பதாக கூறினார் என்றும் சதாசிவம் அருண்ராமிடம் அழைபேசி மூலம் எதிரிகள் தரக்குறைவாக, இழிவாக பேசினார்கள் என்றும் அதற்கு அருண்ராம் சதாசிவத்திடம் 3ம் எதிரியான மஞ்சுதான் அழைபேசி மூலம் தொடர்ந்துபேசி எனக்கு தொல்லை கொடுத்து வந்தார் என்றும் மேலும் அருண்ராம் தன்னுடைய அழைபேசியில் உள்ள incoming, outgoing அழைப்புகளை பார்த்தால் 3ம் எதிரி அழைபேசி மூலம் தொடர்ந்து பேசி தொல்லை கொடுத்தார் என்று கூறினார் என்றும் மேலும் என் மகன் தற்கொலை செய்து கொள்வதற்கு 4 நாட்களுக்கு முன்பு மேற்கண்ட சங்திகளை சதாசிவத்திடம் கூறினார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். சதாசிவம் என்னிடம் கூறினார்.

4. மேற்படி சங்கதிகளை அனைத்தும் உண்மையில் நடைபெறவில்லை வழக்கிற்காக என் கணவர் சொல்லிகொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சதாசிவத்திடம் எந்த தேதியில் 1,2 எதிரிகள் மிரட்டினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான்கு நாட்களுக்கு முன்பு தெரியும்.

5. அக்டோபர் மாதம் 2013ம் ஆண்டு நானும், என் கணவரும் திண்டுக்கல்லில் இருந்து காலிக்கட்டுக்கு பெண் கேட்பதற்காக கிழம்பி சென்றோம் என்றும் மேலும் என் கணவர் 2ம் எதிரியான பானுமதியிடம் நல்ல விசயமாக பேச என் மனைவியுடன் வருகிறேன் என்று அழைபேசியில் கூறினார் என்றும் அதற்கு 2ம் எதிரி சம்மதம் தெரிவித்தார் என்றும் மேற்படி நானும், என் கணவரும் காலிக்கட்டு சென்று எதிரிகள் வீட்டிற்கு சென்ற போது அங்கு காலிங்பெல் அடித்த போது எதிரிகள்

யாரும் வரவில்லை என்றும் மேலும் எதிரிகளின் வீட்டின் கதவை தட்டினோம் ஆனால் யாரும் வரவில்லை என்றும் எனவே என் கணவர் சிவராமகிருஷ்ணனுக்கு அழைபேசி மூலம் தொடர்ப்பு கொண்டார் ஆனால் அவர் அழைபேசியை எடுக்கவில்லை என்றும் அதன்பிறகு என் மகன் 6 மாதம் காலம் மனம் உடைந்து சென்னையிலிருந்தார் என்றும் வழக்கிற்காகவேண்டி என் கணவரின் ஆலோசனைபடி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

6. 30.06.2014 நான் ஏற்கனவே போலீசாரிடம்கொடுத்த வாக்குமூலத்தில் என் மருமகனின் பெயர் வந்தால் என் மருமகன் ஏதாவது சொல்லிவிடுவார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. மீண்டும் சாட்சி சரி என்று சாட்சியம் அளித்தார். உண்மையில் எனது மருமகன் சரவணன்வெங்கட்ராமன் அவரது சகோரரியான 2ம் எதிரியிடம் தன்னுடைய மைத்துனர் அருண்ராமிற்கு 3ம் எதிரியை திருமணம் செய்யலாமா என்று 2009ம் வருடம்கேட்டதாகவும் அப்போழுது 3ம் எதிரி பி.எஸ்.சி படித்துகொண்டு இருந்தவர் மேல்படிப்பு படிக்க விரும்பியதால் உறவில் பெண்கொடுக்கவேண்டாம் என்ற காரணத்தினால் அவரது குடும்பத்தில் 3வது எதிரி உட்பட அனைவரும் கலந்துஆலோசித்து திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றாலும் பின்னிட்டு இருவரின் குடும்பத்தாருக்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல.

7. மேற்படி சங்கதி என் மருமகன் சரவணவெங்கட்ராமனுக்கு தெரியும் என்பதால் அவரை விசாரித்தால் இந்த வழக்கிற்கு பாதகமாகிவிடும் என்பதால் அவரை பற்றி போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அ.த.சா.பொ.ஆ. 2 முதல் அ.த.சா.பொ.ஆ.5 உண்மையில் எனது மகனால் எழுதப்பட்டவை அல்ல இந்த வழக்கிற்காக எனது கணவர் வேறொருவர் உதவியுடன் தயார் செய்யப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. 3வது எதிரி என் மகனை காதலிக்கவோ,ஏமாற்றவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. 1,2 எதிரிகள் என்னுடைய மகனை யாரிடமோ கேவலமாக பேசவோ, மிரட்டவோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய மகனின் தற்கொலைக்கு எதிரிகள் மூவரும் காரணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மகன் சென்னையில் நடத்திவந்த பல் மருத்துவமனை சரிவர இயங்காததால் மனம் உடைந்து

காணப்பட்டதால் வேறொருவர் மூலம் தெரிந்துகொண்டு மருத்துவமனையை மூடிவிட்டு ஈரோடு வரசொல்லி கண்டிப்புடன் நானும், என் கணவரும் கூறியதால் அவர் ஈரோடு வந்தார் என்றும் அதனால் மனம் உடைந்து தற்கொலை செய்து கொண்டார் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை:– இல்லை